வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

தேதி 18.03.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பிரயாக்ராஜில் நடைபெற்ற மஹா கும்பமேளா, எழுச்சிமிகு இந்திய உணர்வை வெளிப்படுத்தி, இந்தியாவின் வல்லமையை உலகிற்கு எடுத்துக்காட்டி இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பொதுத் துறை வங்கிகள், 2 லட்சத்து 27 ஆயிரம் கோடி ரூபாய் வாராக் கடன்களை வசூலித்து இருப்பதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் தெரிவித்துள்ளார்.

காரைக்கால் திருநள்ளாறில், அரசு மருத்துவக் கல்லூரி தொடக்க மத்திய அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளதாக, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று சட்டமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

கோடைக் காலத்தில் வெயிலின் தாக்கம் மற்றும் தொற்று நோய்களை தவிர்க்க, பொது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என, சுகாதாரத் துறை கூறியுள்ளது.

-----------------

மோடி-கும்பமேளா 1 (18)

பிரயாக்ராஜில் நடைபெற்ற மஹா கும்பமேளா, எழுச்சிமிகு இந்திய உணர்வின் பிரதிபலிப்பாகவும், இந்தியாவின் வல்லமையை உலகிற்கு வெளிப்படுத்துவதாகவும் அமைந்ததாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். மஹா கும்பமேளா குறித்து இன்று, மக்களவையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டு பேசிய அவர், வேற்றுமையில் ஒற்றுமை

காண்பதே இந்தியாவின் சிறப்பம்சம் என்றும், மஹா கும்பமேளாவில் இதை அனைவருமே உணர முடிந்ததாகவும் கூறினார். உலக நாடுகள் பல்வேறு சவால்களை சந்திக்கும இன்றைய நிலையில், இந்தியா தனது ஒற்றுமையை இவ்வாறு வெளிப்படுத்தி இருப்பது, நாட்டின் மிகப் பெரிய பலம் என்றும், அவர் தெரிவித்தார். நீர் சேமிப்பின் முக்கியத்துவத்தை பிரதமர் வலியுறுத்தி பேசுகையில், இந்தியாவில் பல ஆறுகள் உண்டு என்றாலும், சில ஆறுகள் அழியும் நிலையில் இருப்பதால், மஹா கும்பமேளாவின் வெற்றியில் இருந்து உணர்வூக்கம் பெற்று, நதி உற்சவத்தை அனைத்து நதிகளுக்கும் நீட்டித்தல் அவசியம் என்றார். கடந்த ஆண்டு அயோத்தியில், ராமர் கோவில் பிராண பிரதிஷ்டை விழா நடைபெற்றதை பிரதமர் தமது உரையில் சுட்டிக் காட்டி, அடுத்த ஆயிரம் ஆண்டுகளுக்கு இந்தியா, தயாராவதை குறிக்கும் வகையில் அமைந்த இவ்விழாவின் உணர்வு, மஹா கும்பமேளாவில் மேலும் வலுப்பட்டுள்ளதாக தெரிவித்தார். மஹா கும்பமேளாவின் வெற்றிக்கு பங்களித்த அனைவருக்கும் நன்றி

மோடி-கும்பமேளா 2 (7)

தெரிவித்துக் கொள்வதாகவும் பிரதமர் கூறினார். பிரதமர் பேசி முடித்தவுடன், எந்த விதியின் கீழ் பிரதமர் பேச அனுமதிக்கப்பட்டது எனக் கேட்டு, எதிர்கட்சி உறுப்பினர்கள் அவையில் அமளி ஏற்படுத்தினர். பிரதமரும், அமைச்சர்களும், அவையில் அறிக்கை வெளியிட, விதிமுறைகளில் இடம் இருப்பதாக, சபாநாயகர் திரு. ஓம். பிர்லா தெளிவுபடுத்தினார். அதன்பின்னரும் அமளி நீடித்ததால், மக்களவையின் அலுவல்கள், பிற்பகல் 1 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டன.

-----------------

*ரயில்வே (17)*

இந்திய ரயில்வே கடந்த 10 ஆண்டுகளில், 5 லட்சம வேலை வாய்ப்புகளை வழங்கி இருப்பதாகவும், 1 லட்சம் பணியிடங்களுக்கு ஆள் எடுக்கும் நடைமுறைகள் தற்போது நடைபெற்று வருவதாகவும், ரயில்வே அமைச்சர்

திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். இன்று மக்களவையில், ரயில்வே துறையின் செயல்பாடுகள் பற்றிய விவாதங்களுக்கு, எதிர்கட்சிகளின் அமளிக்கு இடையிலேயே, பதில் அளித்துப் பேசிய அவர், 2020ஆம் ஆண்டுக்கு மேல் நாட்டில், ரயில் கட்டணங்கள் உயர்த்தப்படவில்லை என்றும், ரயில்வே துறையில் பயணிகளின் பாதுகாப்பிற்கு முக்கிய கவனம் செலுத்தப் படுவதாகவும் கூறினார். ரயில்வே துறையில் பெரிய ஏற்றுமதி நாடாக இந்தியா தற்போது மேம்பட்டுள்ளதாக, அமைச்சர் தெரிவித்தார். பீகாரில் தயாரிக்கப்படும் ரயில் எஞ்சின்களும், தமிழகத்தில் தயாரிக்கப்படும் ரயில் சக்கரங்களும், இனி உலகெங்கிலும் ஓடும் என அவர் குறிப்பிட்டார். பின்னர் அவையில், ஜல் சக்தி அமைச்சகத்திற்கான மானியக் கோரிக்கைகள், அவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. ஆயினும், எதிர்கட்சிகளின் அமளி நீடித்ததால், மக்களவையின் அலுவல்கள், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

-----------------

மோடி ஒலிம்பிக் (10)

இத்தாலியில் நடைபெற்ற, உலக அளவிலான, குளிர்கால சிறப்பு ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்று, 33 பதக்கங்களை வென்று திரும்பி உள்ள, இந்திய விளையாட்டு வீரர்-வீராங்கனைகளை, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில் சந்தித்து பாராட்டினார். நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ள இக்குழுவினரின் சாதனைகள் குறித்து, தாம் பெருமிதம் அடைவதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறியுள்ளார். மற்றொரு பதிவில், இந்தியக் கலாச்சாரத்தை உலக அளவில் பரப்பி வரும் ஜெர்மன் பாடகர் CassMae-யைப் பாராட்டி உள்ளார். கலாச்சாரப் பரிமாற்றத்தில் இடைவெளியை போக்குவதில், கேஸ்மே போன்றவர்கள் முக்கிய பங்காற்றி வருவதாக, அவர் தெரிவித்துள்ளார்.

-----------------

*நிர்மலா (7)*

நாட்டின் பொதுத் துறை வங்கிகள், வாராக் கடனாக வகைப் படுத்தப்பட்ட 2 லட்சத்து 27 ஆயிரம் கோடி ரூபாய் கடன்களை வசூலித்து இருப்பதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் தெரிவித்துள்ளார். இன்று மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதை தெரிவித்த அவர், வாங்கிய கடனை திருப்பி செலுத்தாதவர்கள், அதன் விளைவுகளில் இருந்து தப்ப முடியாது என்றும், வாராக் கடன்களின் வசூல், தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் ஒரு நடவடிக்கை என்றும் கூறினார்.

----------------

*தேர்தல் ஆணையர் (15)*

தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ் குமார், இன்று புதுடெல்லியில், உள்துறை உள்ளிட்ட மத்திய துறைகளின் செயலர்கள் மற்றும் இந்திய தனி அடையாள ஆணையத்தின் தலைமை செயல் அதிகாரியுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். வாக்காளர் அடையாள அட்டையை, ஆதார் எண்ணுடன் இணைப்பது குறித்து இக்கூட்டத்தில் முக்கியமாக விவாதிக்கப்பட்டது. தேர்தல் நடைமுறைகள் தொடர்பான, நீண்டகால சவால்களுக்கு தீர்வுகாண, தேர்தல் ஆணையம் தொடர்ச்சியான முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. போலி வாக்காளர் அடையாள அட்டைகளை, அடுத்த 3 மாதங்களுக்குள் முற்றிலுமாக ஒழித்தல், கள நிலையிலான அனைத்து தேர்தல் அதிகாரிகள் மற்றும் ஏஜென்டுகளுக்கும், அவரவர் பங்கு பணி குறித்து, பயிற்சி அளித்தல், வாக்குச் சாவடிகளில் நீண்ட வரிசைகளை தவிர்த்தல் ஆகியன இதில் அடங்கும். எதிர்காலத்தில் எந்தவொரு வாக்குச் சாவடியிலும், வாக்காளர் எண்ணிக்கை, ஆயிரத்து 200க்கு அதிகமாக இராது என்றும், தேர்தல் ஆணையம் ஏற்கனவே அறிவித்துள்ளது.

----------------

*ரங்கசாமி-சட்டமன்றம் (12)*

காரைக்கால் திருநள்ளாறில், அரசு மருத்துவக் கல்லூரி தொடக்க மத்திய அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளதாக, முதலமைச்சர் திரு. ரங்கசாமி

தெரிவித்துள்ளார். இன்று சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தின் போது, அவர் இதை தெரிவித்தார். புதுச்சேரி இந்திரா காந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில், புதிதாக 266 செவிலியர்களை நியமிக்க, அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், கூடுதலாக 300 ஊழியர்களை நியமிக்க திட்டம் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அதே நேரத்தில், அவுட்-சோர்சிங் செய்யலாமா என அரசு யோசித்து வருவதாகவும் அவர் கூறினார். மற்றொரு கேள்விக்கு முதலமைச்சர் பதில் அளிக்கையில், புதுச்சேரியில் உள்ள கடைகளில் பெயர்ப் பலகைகள் தமிழில் இருக்க வேண்டியது அவசியம் என்றார். தமிழ் நமது உணர்வு என்றும் அவர் குறிப்பிட்டார்.

-----------------

*கோடைக்காலம் 1 (3)*

கோடைக் காலத்தில் வெயிலின் தாக்கம் மற்றும் கிருமிகளால் ஏற்படும் தொற்று நோய்களை தவிர்ப்பது குறித்து, புதுச்சேரி அரசின் சுகாதாரத் துறை, விழிப்புணர்வு செய்தி வெளியிட்டுள்ளது. இதுகுறித்து கூடுதல் விவரங்கள்...

(வாய்ஸ்)

*கோடைக்காலம் 2 (20)* (வாய்ஸ்)

வெயில் காலத்தில் அதிக வியர்வை மூலம் உடலில் நீரிழப்பு மற்றும் உப்புச் சத்து குறைவதை தடுக்க, உப்பு கலந்த மோர், நீர் பானங்கள், அல்லது ஓஆர்எஸ் கரைசல் அருந்தலாம் என்றும், ஹீட் ஸ்ட்ரோக் ஏற்பட்டால், ஐஸ் கட்டி, தண்ணீர் அல்லது குளிர்ந்த காற்றின் உதவியோடு உடலை குளிர்வித்து, சிகிச்சை அளிக்கலாம் என்றும், சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. வயிற்றுப் பிரச்சனைகளை தடுக்க, சரியாக சமைக்கப்படாத இறைச்சி, திறந்த நிலையில் விற்கப்படும் உணவுகள், மற்றும், அசுத்தமான நீரை தவிர்க்க வேண்டியது அவசியம் என்றும், சுய சுத்தம் பேணுதல், முகக் கவசம் அணிதல் போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம், பொன்னுக்கு வீங்கி, தட்டம்மை, ஃப்ளூ காய்ச்சல் போன்ற வைரஸ் நோய்களை தடுக்கலாம்

என்றும், தெரிவிக்கப் பட்டுள்ளது. சன் கிளாஸ் அணிவதன் மூலமாகவும், கண்களை அடிக்கடி தொடாமல் தவிர்ப்பதன் மூலமாகவும், கன்ஜங்க்டிவைடிஸ் என்னும் கண் நோயில் இருந்து தற்காத்துக் கொள்ளலாம் என்றும் சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. இந்த எல்லா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மீறி, வெயில் கால நோய்களால் பாதிக்கப்பட்டால், அருகில் உள்ள அரசு மருத்துவமனை, அல்லது, ஆரம்ப சுகாதார நிலையத்தை பொது மக்கள் அணுகலாம் என்றும், அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள், தேவையான மருந்துகளுடன் தயார் நிலையில் வைக்கப் பட்டுள்ளதாகவும், சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

-----------------

*திமுக வெளிநடப்பு (10)*

இன்று மக்களவையில், தொகுதி மறுவரையறை உத்தேசம் குறித்து பிரச்சனை எழுப்ப அனுமதி மறுக்கப்பட்டதை தொடர்ந்து, திமுக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். மக்கள் தொகை கணக்கெடுப்பே இன்னும் முடியவில்லை என்பதால், தொகுதி மறுவரையறை இப்போதயை பிரச்சனை அல்ல என்று கூறி, சபாநாயகர் அனுமதி மறுத்து விட்டதால், வெளிநடப்பு மேற்கொள்ளப்பட்டது. பின்னர் திமுக நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி, நாடாளுமன்றத்திற்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசுகையில், தொகுதி மறுசீரமைப்பால், தமிழகம் போன்ற மாநிலங்கள் பாதிக்கப்படும் என்றும், மத்திய அரசு இதுகுறித்து விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் கோரினார்.

-----------------

*சோனியா (9)*

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டப் பயனாளிகளுக்கான குறைந்தபட்சக் கூலியை உயர்த்த வேண்டும் என, இன்று மாநிலங்களவையில், மூத்த காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியா காந்தி கோரிக்கை விடுத்தார். பூஜ்ய நேரத்தில் அவர் இதுகுறித்து பேசுகையில், வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் முக்கியத்துவத்தை

அரசு குறைத்து வருவதாகவும், இத்திட்டத்திற்கான பட்ஜெட் ஒதுக்கீடுகள் உயர்த்தப்படாமல், 86 ஆயிரம் கோடி ரூபாயாக ஒரே அளவில் நீடிப்பதாக குற்றம் சாட்டினார். குறைந்தபட்சக் கூலியை உயர்த்த ஏதுவாக, நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

-----------------

*மொரீஷியஸ்* (7)

இந்தியாவிற்கும், மொரீஷியஸ் நாட்டிற்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகத்திலும், அனுமதிக்கப்பட்ட மூலதன கணக்குகள் மூலமான பணப் பரிமாற்றத்திலும், உள்ளூர் நாணயங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பது குறித்து, ரிசர்வ் வங்கியும், மொரீஷியஸ் மத்திய வங்கியும், புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன. இதனால் வர்த்தக உறவுகள் மேம்படுவதுடன், நிதி ஒருங்கிணைப்பை ஆழப்படுத்தவும், கலாச்சாரம் மற்றும் வர்த்தக உறவுகளை வலுப்படுத்தவும் ஏதுவாகும் என, ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

-----------------

*நாசா* (12)

கடந்த 9 மாதங்களுக்கும் மேலாக, விண்வெளியில் சிக்கி இருந்த சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர் ஆகிய விண்வெளி வீரர்கள், இந்திய நேரப்படி இன்று காலை 10.35 மணிக்கு, சர்வதேச விண்வெளி மையத்தில் இருந்து வெற்றிகரமாக பிரிந்து, பூமியை நோக்கிய 17 மணி நேர பயணத்தை தொடங்கி உள்ளனர். விண்வெளிக் குழுவினர் பூமிக்கு திரும்ப, சாதகமான சூழல் இருப்பதாகவும், விண்வெளி வீரர்கள், இந்திய நேரப்படி நாளை அதிகாலை 3.27 மணிக்கு, ஃப்ளோரிடா கடற்கரை அருகே, கடலில் வந்து இறங்குவார்கள் என்றும், அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. சுனிதா, வில்மோர் ஆகியோருடன், அமெரிக்க விண்வெளி வீரர் நிக் ஹேக், ரஷ்ய விண்வெளி வீரர் அலெக்சாண்டர் கோர்புனோவ் ஆகியோரும், SpaceX Crew Dragon விண்கலன் மூலம் பூமிக்கு திரும்ப உள்ளனர்.

-----------------

*வானிலை (13)*

தென்னிந்திய பகுதிகளின் மேல், வளி மண்டல கீழடுக்கு சுழற்சி பகுதிகளில், கிழக்கு திசைக் காற்றும், மேற்கு திசைக் காற்றும் சந்திக்கும் பகுதி நிலவுவதால், வரும் 24ஆம் தேதி வரை, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. 22ஆம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலையில், பெரிய மாற்றத்திற்கான வாய்ப்புகள் குறைவுதான் என்றாலும், 20ஆம் தேதி வரை ஓரிரு இடங்களில், அதிகபட்ச வெப்பநிலை இயல்பை விட 3 டிகிரி செல்சியஸ் வரை, அதிகமாக பதிவாகலாம் என்றும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, கரூர் பரமத்தியில், 38.5 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகி உள்ளது. புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில், வெப்பநிலை 32 டிகிரி முதல், 35 டிகிரி செல்சியஸ் வரை இருந்தது.

-----------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரயாக்ராஜில் நடைபெற்ற மஹா கும்பமேளா, எழுச்சிமிகு இந்திய உணர்வை வெளிப்படுத்தி, இந்தியாவின் வல்லமையை உலகிற்கு எடுத்துக்காட்டி இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பொதுத் துறை வங்கிகள், 2 லட்சத்து 27 ஆயிரம் கோடி ரூபாய் வாராக் கடன்களை வசூலித்து இருப்பதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் தெரிவித்துள்ளார்.

காரைக்கால் திருநள்ளாறில், அரசு மருத்துவக் கல்லூரி தொடக்க மத்திய அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளதாக, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று சட்டமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

கோடைக் காலத்தில் வெயிலின் தாக்கம் மற்றும் தொற்று நோய்களை தவிர்க்க, பொது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என, சுகாதாரத் துறை கூறியுள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது